விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 9 முஹறம் 29 இதழ் 253
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-10-84


## அமெரிக்கத் தூதர்கள் திடீர் படையெடுப்பு!

### ஆயுத உதவி பற்றி ஆராய்வார்கள்

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் இவ் வாரம் கொழும்பில்கூடி, சில முக்கிய பிரச்னைகள் குறித்து ஆராய்வார்கள்.

இலங்கைக்கு இவ்வாரம் விஜயம்செய்யவிருக்கும் தென் கிழக்கு ஆசிய அமெரிக்கத் தூதர்கள் அ னை வ ரு ட ன், அமெரிக்க ராஜாங்க அமைச்சைச் சேர்ந்த ஐந்து உயர் அதிகாரிகளும் அடங்குவார்கள்.

தற்பொழுது இந்தியாவில் சுற்று விஜயம்செய்யும் அமெரிக்க வெ ளி யு ற வு துணை அமைச்சர் திரு.றிச்சார்ட் மேர்பியும் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

அமெரிக்கத் தூதர்களும் மற்றும் இலங்கை அரசின் உயர் அதிகாரிகளும் இம்மாதம்

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் ஏற்கக்கூடிய சுயஆட்சி ஏற்படவேண்டும்!

## அமெரிக்காவிடம் இந்தியா வலியுறுத்து

(புதுடில்லி)

**''இலங்கைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூ டி ய திருப்திகரமான சுய அதிகாரம்கொண்டஅமைப்பு ஒன்றை அங்கு ஏற்படுத்தவேண்டும்'' என்று இந்தியா அமெரிக்காவிடம் எடுத்துக் கூறியுள்ளது.**

இந்திய வெளியுறவு கொள்கைக்குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி புதுடில்லி வந்திருந்த அமெரிக்க துணைவெளியுறவு அமைச்சர் திரு. றிச்சார்ட்மேர்பியுடன் இலங்கைத் தமிழர் பிரச்னைகுறித்து பேசுகையில் இ த னை த் தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்றுமுன் தினம் சுமார் ஒருமணிநேரம் இலங்கைத்தமிழர் பிரச்னை குறித்து இருவரும் பேச்சுக்களை நடத்தினார்கள்.

இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்கள் பிரச்னைதற்போது மிகவும் மோசமான ஒரு நிலையை அடைந்திருப்பதினால் அந்தப்பிரச்னைக்கு உடனடியாக அரசியல்தீர்வு ஒ ன் று கா ண ப் ப ட வேண்டும் என் பதினை வலியுறுத்திய திரு. ஜி. பார்த்தசாரதி ''அங்கு தொடர்ச்சியாக இ ன ரீ தி யா ன மோ'தல்கள் இடம் பெறுவதினால் ஒன்றுமே அறியாதபல அப்பாவிமக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இத

[5ம் பக்கம் 4ம் கலம் பாாக்க]

## வங்கிக்கொள்ளை:

## 1-ம் எதிரிக்குச் சிறை; 2-ம் எதிரி விடுதலை

(கொழும்பு)

பளுகாமம் இலங்கைவங்கி கொள்ளைவழக்கில், முதலாம் எதிரிக்கு இரண்டு குற்றச்சாட்டுக்களிலும் தலாஎட்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

(8-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## 53 தமிழ்க் கைதிகளும் அப்பாவி மக்களும் வேண்டுமென்றே கொலைசெய்யப்பட்டனர்!

### சர்வதேச மன்னிப்புச்சபையின் நடப்பாண்டு அறிக்கையில் கண்டனம்

(லண்டன்)

''இ ல ங் கை யி ல் 1983ம் ஆண்டு ஜூலை மாதம் சிறைச்சாலையொன்றில் கா வ லி ல் வைக்கப்பட்டிருந்த 53 தமிழ்க் கைதிகளும், நிராயுதபாணிகளான வேறு பல அப்பாவித் தமிழ் மக்களும் வே ண் டு மென்றே கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்று சர்வதேச மன்னிப்புச் சபை கு ற் ற ம் சுமத்தியுள்ளது.

நடப்பாண்டுக்கான சபையின் அறிக்கை 382 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

117 நாடுகளில் இடம்பெற்ற அத்துமீறல்கள்பற்றிக குறிப்பிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் முக்கியமாக இலங்கையில் இடம்பெற்ற அத்துமீறல்கள்பற்றியே குறிப்பிடப்பட்டிருந்தது.

''இலங்கையில் சி று பா ன் மைத் தமிழ் மக்களும், மற்றும்

(5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## கொழும்பில் பலர் கைது

(கொழும்பு)

கொழுப்பில் பரவலாக பல்வேறு இடங்களிலுமிருந்து தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுவருவதாகத் தெரிய வந்துள்ளது.

கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்படுவதாகவும் வெளிநாடு செல்வோர்மீது தீவிர கண்காணிப்பு நடப்பதாக்வும் தெரியவருகிறது.

## ஆயர் இல்லப் பணம் ரூ. 16,000 கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-திருமலை ஆயர் இல்லத்திற்குரிய பணம் 16,0 0 ரூபா நேற்று நண்பகல் இரு இனந்தெரியாத இளைஞர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது

இச்சம்பவம் புனித மிக்கேல் கல்லூரிச் சந்தியில் நடைபெற்றது.

சம்பவதினம் ஆயர் இல்லக் காசாளர், காசோலையை வங்கியிலிட்டுப் பணம்பெற்று சைக்கிளில் திரும்பிக்கொண்டிருக்கையில் இனந்தெரியாத இளைஞர் ஒருவர் அவரைத் தள்ளிவிட மற்ற இளைஞர் பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகக் கூறப்பட்டது.

## இன்று இடைத்தேர்தல்

(கொழும்பு)

தென்பகுதியில் பெரும் பாபரப்பை ஏற்படுத்தியுள்ள மின்னேரியா, குண்டசாலை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இரண்டு தொகுதிகளிலும் 40க்கும் மேற்பட்ட சுயேட்சை

(5-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

### நீதிச்சேவை ஆணைக்குழுவினால்

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர் கொழும்பில் கைது!

(கொழும்புத்துறை)

நேர்முகப் பரீட்சை யொன்றுக்குச் சமூகமளிப்பதற்காகக் கொழும்புக்குச் சென்ற சாவகச்சேரியைச் சேர்ந்த வாலிபர் ஒ ரு வ ர் சந்தேகத்தின்மீது கொழும்பு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுப் பாதுகாப்பில் வை கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எஸ் ஜெகதீஸ்வரன் (வயது 23) எ ன் னு ம் வாலிபரே கைதுசெய்யப்பட்டுள்ளவராவார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் பதவி நியமனமொன்றிற்கான நேர்முகப் ப ரீ ட் சைக்கு இவர் அழைக்கப்பட்டிருந்தார்.

நே ர் மு க ப் பரீட்சைக்குச் சமூகமளித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்புவதற்குத் தயாராகும்போது 22ம் திகதி காலைடாம் வீதியில்வைத்து ஜெகதீஸ்வரனைப் பொலிசார் கைது செய்து அழைத்துச்சென்றுள்ளனர்

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப வாலிபரின் தந்தையான

5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)





இன்று
25-10-84
மங்களகரமான
திறப்பு விழா

ARES TEXTILES

அரஸ் ஜவுளியகம்

நிகழும் இரத்தாஷி வருடம் ஐப்பசி மாதம் 9-ம் திகதி (25-10-84) வியாழக்கிழமை பிற்பகல் 1-12—1·26 மணிவரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்

ஜனப் A. S. M. SATHICK
அவர்களால் திறந்துவைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

அரஸ் ஜவுளியகம்
146, நவீன சந்தை, மத்திய வீதி, யாழ்ப்பாணம்
(157) தொலைபேசி: 24001


## பரிபூரணனின் சுருவில் வீடு பலத்த சோதனையிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கு ண் டு க் கு பலியான பொறியியலாளர் பரிபூரணனின் சுருவிலிலுள்ள வீடுபலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து வீட்டிலுள்ளவர்கள், அ ங் கி ரு ந் து வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இரண்டுமுறை சோதனை

(5-ம் பக்கம் 4 கலம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கிளிநொச்சி பராசக்தி தியேட்டருக்குக்கிட்ட,றோட்டருகாமையில் திறமையான 5ஏக்கர் வயல்காணி உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- T. வேலாயுதம், பாற் தொழிற்சாலை கிளிநொச்சி. (365)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியில் 1½ பரப்பு காணி சிறிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பொ.இரத்தினராசா, ''கபே டீலக்ஸ்'', (பஸ் நிலைய முன்பாக), மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (369)

பருத்தித்துறை தும்பளை வீதியில் உடையார் லேனில் அறு பது பரப்பு குடி இருக்க வீடு கிணறு மின்சாரவசதிகளுடன் பனைகள், தென்னைகள், மாமரங்கள் செறிந்துள்ள பயிர்ச்செய்கைக்கேற்ற காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ பகுதியாகவோ விற்பனை செய்யப்படும். தொடர்பு:- திருமதி R. S. கந்தையா, தம்பசெட்டிறோட்டு புலோலி மேற்கு பருத்தித்துறை (மேற்படி காணிச் சொந்தக்காரி) 320

கண்டி வீதி, நுணுவில் கிழக்கு 93 K.M.க்கு முன் 4½ பரப்புக் காணியும், மூன்றுபக்கமதிலும் கிணறு, மின்சார வசதியும், பயிர்களும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. K. B. சுந்தரம், T. P.22454, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 298

பாடசாலை, கூட்டுறவு சங்கக் கடைக்கு அருகாமையில் 11 பரப்பு குடியிருப்புக் காணி மட்டுவிலில் விற்பனைக்கு உண்டு. க. துரைரத்தினம் ஆசிரியர், கரம்பகம், மிருசுவில். 380

நல்ல நிலையிலுள்ள 34 ஸ்ரீ 7000 தொடரிலக்க டெலிகா வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. பாலசிங்கம், கந்தசாமி கோவிலடி, நீர்வேலி. 379

இரண்டு நேரமும் 6 போத்தல் பால் எடுக்கும், மூன்றுவது ஈற்று; இன்னும் 15 நாட்களில் கன்று ஈனும். நல்ல இன மாடு உடன் விற்பனைக்கு. க. முத்துலிங்கம், சீக்கோ காட்வெயர்ஸ், கைதடி சந்தி, கைதடி. 388

84 ஸ்ரீ CD 200 HONDA மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு அல்லது CG 125 சயிக்கிளுக்கு மாற்றஉண்டு. விபரங்களுக்கு: ஜெயந்தா செரமிக்ஸ் சென்ரர், 133/15, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 323

எல்லாசைஸ் திண்டுக்கல் இரும்புப்பெட்டிகளும் விற்பனைக்குண்டு. எவர் சில்வர் மாளிகை, நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 378

## காணவில்லை

இ. இரத்தினம் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம் நல்லூர் கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 26/3, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 391

## தேவை

யாழ். இந்து வேளாள 34 வயதுள்ள ஜேர்மனியில் மாதம் 19000 ரூபா சம்பள நிரந்தர உத்தியோகமுள்ள தீய பழக்கங்கள் அற்ற மணமகனுக்கு 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. அங்கு உறவினர்கள் உள்ளதும் புகைப் படத்துடனும் வரும் பதில்கள் விரும்பப்படும். இல: 374, 'ஈழநாடு,, யாழ்ப்பாணம். 374

புதிதாக ஆரம்பிக்கப்படும் ஸ்தாபனமொன்றிற்கு 5 வருடகால அனுபவமுள்ள லேத்மன் [Lathe-man] தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடனும், கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் 31.10-84 க்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். விளம்பர இல:- 355, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 355

## வாடகைக்கு

கே. கே. எஸ்.வீதி கொக்குவிலில் 4 அறை, 1குசினி, பாத்றூம், 2 ஹோல் அடங்கிய நல்ல வசதி உள்ள வீடு வாடகைக்கு உண்டு. K.P.சுந்தரம், 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T P. 22454. (299)

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் நல்ல இடத்தில் இடவசதியுள்ள இரண்டு கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளன. உடனே தொடர்பு கொள்ளவும். ஷோபா ஏஜென்ஸீஸ் லிமிட்ரெட், 194, காங்கேசன்துறை வீதி, சுன்னுகம். 377

கொக்குவில் (செம்பியன் லேன்) நந்தாவிலில் மின்சாரம், நல்ல குடிநீர் (பைப்) வசதியுடன் பெரிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: என். சிவராஜா, மே/பா இராசம்மா சின்னத்தம்பி, ''யோக பவனம்'' நந்தாவில், கொக்குவில். 399

## கல்வி

Industrial and House Wiring மோட்டர்றீவைண்டிங், எலெக்றிக்கல் என்ஜினியறிங் ஆகிய வகுப்புக்கள் 1-11-84ஆரம்பம். ஒமேகா ரெக்னிகல் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்) 273

## ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி திரு. தி. க. பெரிய தம்பி அவர்களிடம் 15-08-1982 முதல் 24-10-1983வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள்14-11 1984காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து என்னுல் விற்கப் படும்.

**வி.செ.குட்டிப்பிள்ளை**
ஏலவிற்பனையாளர்.
643, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (383)

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

புலோலி மேற்கு வியாபாரி மூலை வீதியைச் சேர்ந்த வேலப்பர் முருகேசு பெண் சின்னப்பிள்ளை மறுநாமம் பாக்கியத்தின் மரணசாதன விடயமாக,

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்க } இல: ரீ/

எதிர் 1205

புலோலி மேற்கு, வியாபாரி மூலை வீதியைச் சேர்ந்த வேலப்பர் முருகேசு.

— மனுதார்

மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணசாதனத் தத்துவ வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட காலஞ் சென்றவர் விட்டிறந்த மரணசாதனத்தை நிரூபிப்பதற்கு மேற்படி மன்றில் தாக்கல் செய்யப் பட்டுள்ளதெனவும், அதில் அதற்கிணங்க 1984-ம் ஆண்டு ஆனி மாதம் 25ந் திகதி முதலிலே முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும், இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ந் திகதி.

நீதுமன்றக் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
**வ.கு. கணபதிப்பிள்ளை**
மனுதாரின் சட்டத்தரணி
357

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கார்த்திகேயனின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் உடமைகள் சம்பந்தமாக,

கார்த்திகேயன் கைம் பெண் புவனேஸ்வரி, கரவெட்டி மத்தி.

—மனுதார்

இல; T 1193.

எதிர்
(பராயமற்றவர்கள்)

1. கார்த்திகேயன் ஐங்கரன்
2. கார்த்திகேயன் பவானி
3. கணபதிப்பிள்ளை சின்னையா, 1ம், 2ம் பிரதிவாதிகளின் பாதுகாவலர் எல்லோரும் கரவெட்டி மத்தி.

— பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப் பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் மேற்சொல்லப்பட்ட பராயமடையாத 1ம், 2ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராக 3ம் பிரதிவாதி நியமிக்கப்படுவார் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ம் திகதி மு. ப. 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
**பெ. செ. பாலசிங்கம்**
மனுதாரின் சட்டத்தரணி

5-10-84 காலம் 30-11 84 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக்கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்
315

## பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை.

## வெற்றுப்பொருள் கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் ஏறக்குறைய 3000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக் குண்டு.

கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 30-10-84 நண்பகல் 12.00மணிக்கு முன்பதாக முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இங்ஙனம்
பொதுமுகாமையாளர்.
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.
19-10-84 பளை. 396

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

முரசுமோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா மகள் விஜயலட்சுமியின் மரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயமாக

— காலஞ்சென்றவர்

பொன்னுத்துரை கந்தையா, முரசுமோட்டை.

— மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் 226

எதிராக

பொன்னுத்துரை கந்தையா பெண் பராக்கிரமதேவி, முரசுமோட்டை,

— எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனம் எழுதப்படாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப் பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதில் அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19/24 திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**ஆ. குணநாயகம்,**
பதிவாளர்

தயாரித்தவர்:

**செ. பாலகிருஷ்ணன்**
மனுதாரின் சட்டத்தரணி

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**ஆ. குணநாயகம்,**
பதிவாளர்
108 3-10-84.

## எம். ஜி. ஆர். சுகமடையப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி சிவன் ஆலய முன்றலில், ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் கடும் சுகவீனமுற்றிருக்கும் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சுகமடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்வதில் ஈடுபட்டனர்.

### குருநகரில்

குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் சீ-நோர்வலைத் தொழிற்சாலை ஊழியர்கள் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் குணமடையவேண்டுமென்று திருப்பலிபூசை ஒப்புக் கொடுத்தனர்.

குருநகரிலுள்ள மக்களும் முதலமைச்சர் குணமடையவேண்டுமென்று மேற்படி தேவாலயத்தில் பிரார்த்தனை செய்தனர். [பா

முஃக. முத்துக்குமார்
சட்டத்தரணி
பருத்தித்துறை.

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பு ஜெயராஜா என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்,

—மரணமெய்தியவர்

கந்தப்பு ஜெயராஜா கைம் பெண் இந்துமதி 'சிவஞெளி வாசா' புதுத் தோட்டம், கரவெட்டி

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்க } Testy/1184

எதிர்

1. ஜெயராஜா ரகேஷ்
2. ஜெயராஜா மகள் ராஜி
3. ஜெயராஜர ரமணன் 1- 3 பராயமடையாத எதிர்வாதிகள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 4ம் எதிர்வாதி மூலமாக
4. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் எல்லோரும் 'சிவஞெளிவாசா' புதுத் தோட்டம் கரவெட்டி.

—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது எனவே அக்கறை உள்ள எவரேனும் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ந் திகதி காலை 9-00 மணிக்கு இம் மன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப் பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்குகாரணம்ஏதும் இருப்பின் அவற்றைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு ஐப்பசிமாதம் 15ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
(ஒப்பம்)
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று
பருத்தித்துறை

வரைவு
**மு.க. முத்துக்குமார்**
மனுதாரின் சட்டத்தரணி
387

# பாகிஸ்தானுக்கு அணுஆயுத பாதுகாப்பு அளிக்க அமெரிக்கா முயற்சிக்கவில்லை!

## வெளியுறவு துணை அமைச்சர் விளக்கம்

புதுடில்லி அக், 24

'அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அணு ஆயுதப் பாதுகாப்பு வழங்கவிருக்கிறது என்ற செய்தி தவருனது'' என்று அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் றிச்சார்ட் மேர்பி குறிப்பிட்டுள்ளார்.

மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அமைச்சர் இங்குள்ள தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு நாடு திரும்புகையில் வெளியிட்ட அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; ''பாகிஸ்தானை எந்தச் சமயத்திலும் தாக்கும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்பதினை அமெரிக்கா முழுமையாக உணர்ந்து விட்டது இதே போன்று இந்தியா மீது பாகிஸ்தானும் எந்த சமயத்திலும் தாக்குதல் நடத்தாது. அப்கானிஸ்தானில் சோவியத்படைகள் பெருமளவில் நிலை கொண்டிருப்பதனுல் பாகிஸ்தானுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனுல் தான் பாகிஸ்தானுக்கு பாதுகாப்பளிக்க அமெரிக்கா முயல்கின்றது என்றுர்.

இரு நாடுகளும் விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் என்று தான் நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளியுறவு கொள்கைத் திட்ட குழுத் தலைவர் திரு ஜீ. பார்த்தசாரதியுடன் அமெரிக்க அமைச்சர் பேச்சு நடத்திஞர்.

''அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதி நவீன ஆயுதங்களை வழங்கி வருவதினுல் இப்பிராந்தியத்தில் பதட்டம் அதிகரிப்பதோடு இந்தியாவின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதினை ஜி. பார்த்தசாரதி அமெரிக்க அமைச்சருக்கு விளக்கினுர்.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகவும் அமைச்சருடன் அவர் பேச்சு வார்த்தை நடத்திஞர். [சூ]

## ''இந்திய எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது கஷ்டமானது''

### ராஜீவ் கருத்து

புவனேஸ்வரா, அக். 24

''இந்திய எதிர்க்கட்சிகளிடையே பொதுப்படையான ஒற்றுமை இல்லை. இதனுல் அக்கட்சிகள் எந்தச் சமயத்திலும் ஒன்றிணைந்துகொள்ள முடியாது'' என்று இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ராஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அவர் ஒரிசா மாநிலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

தம்மிடையே பொதுப்படையான ஒற்றுமை ஏதும் இல்லாத எதிர்க்கட்சிகள் கூட்டும் மகாநாடுகளும், ஒற்றுமை முயற்சிகளும் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும்வெளிநாட்டுச் சக்திகளுக்கு பெரும் வாய்ப்பை அளிக்கின்றன. முக்கியமாக இந்திய எதிர்க்கட்சிகளுக்கு இந்தியாவின் பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை என்பவற்றில் அக்கறை ஏதும் கிடையாது.'' என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## தென்னுபிரிக்க இனஒதுக்கல் கொள்கை: ஐ. நா. சபை கண்டனத் தீர்மானம்

நியூயோர்க், அக். 24

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையையும், அங்கு பெரும்பான்மை கறுப்பின மக்கள் ஒடுக்கப்படுவதனையும் கண்டித்து ஐ. நா. பந்தோபஸ்துசபை கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

14நாடுகள் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. எந்தவொரு நாடும் எர்த்து வாக்களிக்கவில்லை.

இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில வாசகங்கள் தவருனவை என்று தெரிவித்து வாக்களிப்பில் அமெரிக்கா கலந்துகொள்ளவில்லை.

ஐ. நா.வின் எந்தவொரு தீர்மானத்தையும் தான் ஏற்றுக்கொள்வதில்லை என்று தென் ஆபிரிக்கா ஏற்கனவே அறிவித்துவிட்டது தெரிந்ததே.

இதேவேளை இந்த ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற கறுப்பு இன அங்கிலிக்கன் பிஷப் டெஸ்மன்ட் ரூற்று ''தென்னுபிரிக்காவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு ஐ. நா. பநதோபஸ்துசபை உதவவேண்டும்'' என்று கோரிக்கை விடுத்துள்ளார். (சூ)

## தபாலக மதில் சேதம்

[வவனியா]

மாங்குளம் தபால்அலுவலக மதில் இடிக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதியில் குறித்த தபாலகம் உள்ளது.

## இந்தோனேஷியாவில் தமிழ்க் கலைவிழா

[மீடான்]

இந்தோனேசியாவின் மீடான் நகரிலுள்ள ஸ்ரீமாரியம்மன்கோவில் நிர்வாகத்தினர் தமிழில் கலைவிழா ஒன்றினை நடத்தவுள்ளனர்.

சைவத்தையும் தமிழையும் பிரதிபலிக்கும் பல நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ள இக்கலை விழா அடுத்த மாதம் 4ம் திகதி நடைபெறும்.

## விபத்தில் 9 பேர் பலி

(போபால்)

மத்தியப் பிரதேசத்தில் டிரக் ஒன்று மின் கம்பத்தில் மோதிக் கொண்டதில் 9பேர் பலியாகினர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

### திருநெல்வேலி விவசாய அலுவலக

## 'ஜீப்' கடத்தலால் வேலைகள் ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி விவசாய விரிவாக்க அலுவலகத்துக்குச் சொந்தமான ஜீப்வண்டி கடத்தப்பட்டு இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படாததால் விவசாய விரிவாக்க வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அந்த அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்

இந்த ஜீப்வண்டி சித்தன் கேணியில் கடந்த 16-ம் திகதி நாலாயிரம் ரூபா பெறுமதியான உரவகை-பசளை மற்றும் விதைகளுடன் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜீப்வண்டியைத்திரும்பவும் ஒப்படைப்பதன் மூலம் விவசாய அபிவிருத்தி இப்பகுதியில் சிறப்புற அமையும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். [மா]

## மினி பஸ்களுக்கு பிரத்தியேக இடம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவில் மினிபஸ்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்குமாறு, இராணுவ அதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபை உப-அலுவலக உத்தியோகத்தரை பணித்துள்ளார்.

முல்லைத்தீவு மின்சார நிலையம் வரைதான் சகல மினிபஸ்களும் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சிந்து மாகாணத்தில் மாணவர் போராட்டம் தொடர்கிறது!

## பொலிஸாருடன் நேரடி மோதல்

கராச்சி, அக். 24

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்று ஆருவது நாளாக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் நீடித்திருந்தது.

மாணவர்கள் பல இடங்களில் பொலிஸாருடன் நேரடியாகவே மோதினுர்கள்.

பொலிஸார் குண்டாந்தடி, கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்து நிலைமையைச் கட்டுப்படுத்த முயன்றனர்.

அண்மையில் 7 மாணவர்கள் பாகிஸ்தான் பொலிஸாரினுல் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மாணவர்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (சூ)

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம்., போன்: 22689

## சீருடையில் வந்தவர்கள் கடத்திச்சென்றுர்கள்!

### மனைவியர்களும், தாயும் புகார்

(யாழ்ப்பாணம்)

சீருடையில் துப்பாக்கிகளுடன் வந்தவர்கள், தங்கள் கணவன்மாரை கடத்திச் சென்றதாக இருபெண்களும், இராணுவ உடையில் வந்தவர்கள் கொக்குளாய் விசேசேவை உந்தியோகத்தர் ரி. ஜெகநாதனை (31வயது) கடத்திச்சென்றுவிட்டதாக அவரின் தாயாரும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனிடம் புகார் செய்தனர்.

அரசாங்க அதிபர் முல்லைத்தீவு இராணுவ அதிகாரி மேஜர் வணிகசேகராவுடன் தொடர்பு கொண்ட போது கடத்தப்பட்ட நேரம், இராணுவத்தினர் எவரும் வெளியில் செல்லவில்லை என்றும் முகாமில் இருந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பலத்ததேடுதல் நடத்திய போது முள்ளியவளையில் ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகி மரத்துடன் கட்டப்பட்டு கிடந்தார் என்றும் இராணுவத்தினர் அவரின் சடலத்தை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று பிரேதச் சாலையில் வைத்துள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொக்கிளாயில் மற்றெருவர் துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் மரமொன்றில் கட்டப்பட்டிருந்தார். அவரும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது விசேட சேவை உத்தியோகத்தர் காடு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபின் பலமாக தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

முள்ளியவளையில் துப்பாக்கி சூட்டுக்கு பலியானவர் தசிவபாதசுந்தரம் அல்லது முத்துலிங்கம் (வயது33) என்று கடைசியாக கிடைத்த செய்தி கூறுகிறது. இவர் ஒரு காவலாளி என்றும் கூறப்படுகிறது.

கொக்கிளாயில் துப்பாக்கி சூட்டினுல் காயமடைந்தவரி இளஞ்சிங்கம் (52 வயது என்றும் இவர் ஒருவிவசாய என்றும் தெரிவிக்கப்பட்டுளது இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிருர். (க)

## மணிவாக்கு

மரங்களின் மூலவேர் அருகே கோடரி வைக்கப்பட்டுள்ளது. ஆகையால் நற்கனி கொடாத ஒவ்வொரு மரமும் அடியோடு வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

— பைபிள்

## நமது நோக்கு

# அணு ஆயுத பாதுகாப்புக்குடை

“குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்” என்பது தமிழ் மூதாட்டியின் திருவாக்கு.

வேகமாகமாற்றமடையும் நவீன உலகிலும் இத்தொன்மை ததும்பும் அருளுரை உண்மையாகவே காணப்படுகிறது.

அன்று அரசர்கள் போரில் தோல்வியடைந்தபோது நாட்டின் ஆட்சி கைமாறுவதும் முடிதுறந்த மன்னர் தேடுவாரற்றுஇழிநிலையடைவதும் சாதாரணமாயிருந்தது.

அணு ஆயுதத்தால் நிர்ப்பந்திக்கப்படும் இன்றைய உலகில் மக்கள் ஆட்சியோ சர்வாதிகார அல்லது ராணுவ ஆட்சியோ நிலைத்திருப்பது சங்கடமாகின்றது.

வல்லரசுகளின் ராணுவ பலமே அகில உலகையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றல் பெற்றிருப்பதை ஔவைப் பிராட்டி அறிந்திருக்கிறார் என்றால் எங்கள் நீதி நூல்கள் எக்காலத்துக்கும் நல் வழிகாட்டிகளே!

இன்று நாட்டில் நடைபெறும் இடைத்தேர்தல்கள் எங்கள் ஜனநாயக சோஷலிச ஆட்சியின் கொள்கைகளுக்கு என்ன அர்த்தம் ஊட்டுகின்றன என்பது விவாதத்துக்குரிய விடயமாகலாம்.

நாளை மறுநாள் (27-ம் திகதி) கொழும்பில் நடைபெறவிருக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமெரிக்கத் தூதர்களின் கூட்டம் உலகின் இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கு மிகமுக்கியமானதென்பது விவாதத்துக்குரியதல்ல. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேஷியா இக்கூட்டத்தில் பங்குபற்றுகின்றன.

இதன் முக்கியத்துவமோ அல்லது இக்கூட்டத்தின் செய்தியோ எங்கள் தினசரிகளில் இன்னும் பிரபல்யம் பெறவில்லை. என்ன மர்மம்?

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கும் ராணுவ உதவி எங்கள் நாட்டின் பாதுகாப்புக்குரிய விடயமல்லவென்று யாரும் வாதாடுவாரா?

இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கும் அமெரிக்க வெளி உறவு துணைஅமைச்சர் றிச்சார்ட் மேர்பி (Murphy) கொழும்புக்கு வரும்வழியில் இந்தியா வந்தடைந்திருக்கிறார்.

திரு. றிச்சார்ட் மேர்பி இந்திய உபகண்ட விவகாரங்களில் அனுபவம்பெற்ற ராஜதந்திர திறமைசாலி. இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிந்த காலங்களில் அமெரிக்க அரச திணைக்களத்தில் இத்துறைக்குத் தலைமை வகித்தவர் இவரென்றால் இக்கூட்டத்தின் முக்கியத்துவம் சொல்லாமலே விளங்கும்.

இந்தியா வந்தடைந்த துணைஅமைச்சருக்கு எதிர்பாராத ‘‘குண்டு’’ ஒன்று காத்திருந்தது.

அது என்ன? பாகிஸ்தான் அமெரிக்க தூதுவர் திரு. டீன் ஹின்டன் லாகூரில் போட்ட ‘குண்டை’ நாம் குறிப்பிடுகின்றோம்.

‘பாகிஸ்தானை இந்தியா தாக்கினால் அமெரிக்கா பாகிஸ்தான் உதவிக்குவிரையும்’ என்று அவர் குறிப்பிட்ட கருத்து இந்தியாவில் பெரும் அமளி ஏற்படுத்தியிருக்கிறது.

இது ஒரு புதிய அல்லது தனிப்பட்ட அச்சுறுத்தல் அல்ல என்பது இந்திய ஆட்சியாளரின் கருத்து.

இதனை விமர்சித்த திரு. மேர்பி, வழக்கம்போல் இதில் எவ்வித உண்மையும் இல்லையென மறுத்திருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அணு ஆயுத பாதுகாப்புக்குடை அளிப்பதாக வெளிவந்த செய்தியைக் கருத்தில்கொண்டு, இந்தக் ‘குண்டை’மதிப்பிடுவதால், இதனை நிராகரிக்க துணை அமைச்சர் மேர்பிக்கு வாய்ப்புஏற்பட்டிருக்கிறது.

‘பாதுகாப்புக் குடை’ என்பதை மறுத்தாலும் ராணுவ ஆட்சியில் காலம் கழிக்கும் பாகிஸ்தானுக்கு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும்பொறுப்பெடுத்த றீகன் நிர்வாகம் என்னஉதவிவழங்குகின்றது?

மிகத் திறமான ஈ2- சீ ஹோக்கி விமானங்கள் போன்ற ராணுவ உதவியை பாகிஸ்தானுக்கு அளிப்பது இந்தியாவுக்கு ஏக்கத்தைக் கொடுப்பது நியாயமே. நவீன போர்முறையில் இத்தகையவிமானங்கள் இவை போன்ற நவீன ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு கிடைப்பதானால், அது இந்தியாவின் ஆட்சி ஸ்திரத்துக்கு அவலமாய்முடியும்.

இந்தக் ‘குண்டைப்’ போட்ட திரு. ஹின்டன் எல்சல்வடொரில் றீகன் நிர்வாகத்துக்கு, இது போன்ற தீங்கு விளைவிக்கும் திருவிளையாடல்கள் புரிந்த தூதுவரெனக் குறிப்பிடப்படுகிறது.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் அமெரிக்க ஜனாதிபதியின் ஆட்சிக்கொள்கை, மத்திய கிழக்கிலோ அல்லது தென்கிழக்கு ஆசியாவிலோ, அமைதியை உண்டுபண்ண உதவாது. கம்மியூனிசம் பரவாது தடுக்கும் பணியில் தனக்கு உகந்த தலைவர்களைப் பாதுகாக்க முயல்வது வெளிப்படை. ஆனால் பாதுகாப்புக் குடை பரந்த நிழல் அளிப்பது சந்தேகமானது. உழுத்துப்போகும் பிலிப்பைன்ஸின் மார்க்கஸ் ஆட்சிக்கு மிண்டுகொடுக்க முன்வருவதுபோல, மற்றைய நாடுகளிலும் மக்கள் நலம் கருதாது, தமது செல்வாக்குக்கேற்பதலைவர்களைப் பாதுகாக்கும் பயனற்ற முயற்சி கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் தலைதூக்கலாம்.

## இன்று மெய்கண்டதேவர் குருபூசை

# சைவசித்தாந்தம்

கலாநிதி சு. நடேசபிள்ளை

தமிழ் மக்கள் பண்டு தொட்டு பக்தியிற் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். ஒருருவம் ஒரு நாமம் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்கு உருவத்தையும் நாமத்தையும் கொடுத்து அதன் வழிப்பட்டு ஆன்மா அது வயாகிப் பேரின்பப் பெருவாழ்வை அடையும் பக்தி மார்க்கம் சைவ அடியார்களாலும், வைணவ ஆழ்வார்களாலும் தமிழ்நாட்டில் நிறுத்தப்பட்டது. அவர்கள் தாம் பெற்ற அநுபவத்தை அமுதப் பாசுரங்களில் அருளிச் செய்தார்கள். அவற்றைப் பாடுங்காலும் நாமும் அவர்கள் பெற்ற அநுபவத்தில் தோய்ந்து பரவசநிலையை ஒரு சிறிதாவது அடையக் கூடியவர்கள் ஆகின்றோம். திருவாசகத்துக்கு உருகாகாதார் இல்லை என்பது நாமறிந்த உண்மை. திருவாவாசகத்துக்கு இருக்கும் இத்தகைய ஆற்றல் வேதத்துக்குமில்லை. என்றனர் ஒரு ஒரு தமிழ்ப் பெரியார். இக்காலத்தில் ஆங்கில நாட்டின் பன்மொழிப் புலவராக விளங்கும் பார்ணட் பேராசிரியர், உள்ளத்தை உருக்கும் பக்திப் பாடல்கள் தமிழில் இருப்பது போல் வேறெந்த மொழியிலும் இல்லை என்று கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா முதலிய திருமுறைகளுக்குப் பின்னர், பட்டினத்தடிகள் பாடிய பாடல்களும், அருணகிரிநாதர் அருளிய தோத்திரங்களும் நமது உள்ளத்தை ஈர்த்து பக்தியிற் பதியவைக்கும் பெற்றி வாய்ந்தவை. தமிழகத்தில் வாழையடி வாழையாக அடியார்கள் தோன்றித் தாம் பெற்ற அநுபவத்தை ஏனையோரும் பெறுமாறு பாடல்களை அருளிச் செய்துள்ளார்கள், பஞ்சேந்திரிய இன்பத்தைக் கடந்து உள்ளத்தை உருக்கி, உடம்பெல்லாம் ஊற்றெடுத்துப் பாயும் பேரின்ப அநுபவம் ஒன்று உண்டு என்பதற்கும், அவ்வநுபவத்தை இப் பிறவியிலேயே பெறலாம் என்பதற்கும், இவ்வருட்பாடல்கள் சான்று பகரும் ஆப்த மொழிகளாகும்.

பக்திக் கொள்கையே நமது சமய வாழ்க்கையின் ஆதாரமாயுள்ளது. இக்காரணம் பற்றியே தமிழ்நாடெங்கும் திருக்கோயில்கள் எழுந்தன. திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் அடவி காடே என்று கூறப்பட்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன பக்தி வழிபாட்டுக்குச் சாதனமாக அமைந்தன. உள்ளும் புறமும் தூய உணர்ச்சியை அடைவதற்குச் சரியை கிரியை முதலியன உதவுகின்றன. திருவங்கமாலைப் பதிகத்தில் ‘தலையே நீ வணங்காய்’ என்ற பாக்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. திருக்கோயிலுள் மூர்த்தியின் கோலத்தையும் அங்கு நடக்கும் தீபாராதனை முதலிய காட்சிகளையும் கண்டு நம் கண்கள் புனிதமடைகின்றன. பக்திப்பாடல்களைக் கேட்டு நம் செவிகள் புனிதமடைகின்றன; இறைவனை வணங்கி நம் கைகள் புனிதமடைகின்றன; திருக்கோயிலை வலம்வந்து நம் கால்கள் புனிதமடைகின்றன; உலக வாசனையால் மலினமடைந்த நம் கரணங்கள் தூய்மைஅடைந்து நாளும் சிவசம்பந்தப்படுகின்றன. சைவசமயம் ஆன்ம ஈடேற்றத்துக்குப் பசு புண்ணியத்தோடுசிவபுண்ணியம் அவசியமென்று வற்புறுத்துகின்றது. பசு புண்ணியம் பிற உயிர்களிடம் காட்டும் அன்புச் செயல். சிவபுண்ணியம் பக்தி வழிபாட்டிற்குரிய சரியை, கிரியை முதலியவற்றைகுறிக்கும் பௌத்தம் போன்ற சமயங்கள் பசு புண்ணியத்தைமாத்திரம் போதிகின்றன. ஆனால் சைவசமயம் இதனோடு அமையாது, ஆன்மா பந்தத்தினின்று நீங்குவதற்குப் பதியாகிய சிவத்தின் சார்பை நாடவேண்டுமென்றும், ஆன்ம ஈடேற்றத்துக்குச் சிவபுண்ணியம் அவசியமென்றும் சாதிக்கின்றது.

சைவசமயத்தின் ஞானபாதம் சைவ சித்தாந்தம் எனப்படும். ஆன்மாபந்தத்தினின்று நீங்கி வீடுபேறடையும் முறையை விளக்குவது சைவசித்தாந்தத்தின் முக்கிய நோக்கம். சைவ சித்தாந்தத்துக்குத்தனிச் சிறப்பளிக்கும் சில கொள்கைகள் உள. ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் பந்த பாசம் எனப்படும். பாசத்தால் கட்டுப்பட்டிருப்பதால் ஆன்மா பசுஎன்று கூறப்படும். பசு பாசங்களை இயக்கும் கர்த்தாபதி எனப்படுவர். சைவ சித்தாந்தம் பதி பசு, பாசம் என்னும் முப்பொருளைப்பற்றி விரித்துரைக்கின்றது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்று சைவ சித்தாந்த ஆன்ம லக்ஷணம் கூறுகின்றது. இக்கொள்கை சைவசித்தாந்தத்துக்குச் சிறப்பாக அமைந்துள்ளது. ஆன்மா பாசத்தைச் சார்ந்த இடத்துப் பாசமயமாகவும், பதியாகிய சிவத்தைச் சார்ந்த இடத்துச் சிவமயமாகவும் உள்ளது இதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். ஆன்மாவுக்கு மெய்ச்சார்பாகிய சிவம் சத்தாகும். பொய்ச்சார்பாகிய பாசம் அசத்தாகும்,

ஆன்மாவுக்கு கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று நிலைகளுண்டு. கேவலத்தில் ஆன்மாவின் அறிவு. இச்சை, செயல் என்ற சக்திகள்மறைக்கப்பட்டு இருண்மயமாக இருக்கும். ஆன்மாவை அவ்வாறு மறைத்து அணுத்தன்மையாகச் செய்வது ஆணவமலம் எனப்படும். இதினின்று ஆன்மா இறைவனது திருவருட்சக்தியால் சிறிது விடுவிக்கப்பட்டு, அதன் அறிவு, இச்சை, செயல்கள் ஏகதேசப்பட்டு விளங்கும் நிலை சகலமாகும். இந்நிலையில் ஆன்மாவின் அறிவு வியாபகமின்றிச் சுட்டறிவாக இருக்கும். சகலத்தின் ஆன்மா சிறிது பிரகாசம் பெற்று இயங்குவதற்குக் காரணம் மாயை ஆகும். ஆன்மா இவ்வாறு இயங்குவதற்குரிய தத்துவங்களெல்லாம் மாயையினின்றே உபகரிக்கப்படுகின்றன. ஆன்மாவின் இச்சைகளைப் பரிபக்குவப்படுத்தித் துடைப்பதற்காகவே அதற்குக் கன்ம ஞானேந்திரியங்களும், அந்தக் கரணங்களும், பஞ்ச பூதங்களாலாய உலகமும் பரமேஸ்வரனால் அளிக்கப்படுகின்றன. மாயாகாரியங்கள் ஆன்மப்பிரகாசத்துக்கு ஓரளவு உபகரிக்கப்படுகின்றமையால், மாயை மூலமாகிய ஆணவத்தினின்றும் வேறாகும், மாயாவாதிகள் கூறும் அநிர்வசனீயமாகிய மாயையினின்று சைவசித்தாந்திகள் கூறும் மாயை பிறிது. ஆயினும் இம்மாயையிலும் மறைப்பு இருப்பதால் இதுவும் பாசபந்தமே ஆகும். கன்மம் புண்ணியம் பாவம் என்று இருதிறப்பட்டு சுகம் துக்கம் என்ற பலன்களுக்கு ஏதுவாய் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் தன்மையுடையதாய் பாசமாகும். சகல நிலையில் ஆணவம், கன்மம், மாயை மூவகை மலங்களும் உண்டு நாமனைவரும் சகலர்களே. நாம் தநு, கரண, புவனபோகங்களைப்பெற்று சிற்றறிவும், சிறுதொழிலும் உடையவர்களாக இருக்கின்றோம். சுக துக்க போகங்களை நாம் அனுபவிக்கச்செய்து, நம்மைப் பாச நீக்கத்துக்குப் பரிபக்குவப்படுத்துவது இறைவனதுசக்தியே கேவலத்திலும் சகலத்திலும் உடன் இருந்து மலங்களைப் பக்குவப்படுத்தி நம்மை மாயவாழ்க்கையில் நடத்தும் இச்சக்தி திரோதான சக்தி என்று கூறப்படும் இறைவனது தர்மரூபமான இச்சக்தி நம்மைத் தண்டித்தும், போகத்தைத் துய்ப்பித்தும் மறக்கருணைகாட்டி ஆள்கின்றது. இந்த கோரசக்தி ஆன்மா பரிபக்குவப்பட்டுச் சுத்தநிலையில் பிரவேசிக்கும் காலத்தில் அநுகிரக சக்தியாக விளங்குகின்றது. திரோதான சக்தியைப்பற்றிச் சைவசித்தாந்தம் கூறும்விளக்கம் ஏனைய சித்தாந்தங்களில் காண்பது அரிதாகும்.

உலகத்தில் கன்மவயத்தால் விருப்பு வெறுப்புகளிலும், சுக துக்கங்களிலும் மாறி மாறிச் சுழலும் ஆன்மா தர்மஉணர்ச்சியைப் பெற்றுப் புண்ணியத்தைச் செய்து பாபத்தைத் தவிர்க்கின்றது. ஆயினும் உலகவாழ்க்கையில் துவர்ப்படைகின்றது. மலபரிபாகத்தால் இருவினை ஒப்பு நேர்கின்றது. நித்தியமாகக் கருதியிருந்த வாழ்வு அநித்தியம் என்ற உண்மை வெளியாகின்றது. ஆன்மா பொய்ச்சார்பை விட்டு மெய்ச்சார்பை நாடுகின்றது இந்த நிலையைத்தான் பட் (5ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## வள்ளிமணாளனை வந்தனை செய்வோம்

இராகம்: சக்கரவாகம் தாளம்: ஆதி

பல்லவி

ஈசனுடன் ஞானமொழிபேசு மெங்கள்செல்வம்
இன்பமெலாந் தந்தருளும் சுவாமிநாதன் (ஈசன்)

அனுபல்லவி

வாசமலர்த்தாள் ஐயன்வல்வினை போக்கிடுவான்
நேசம்வைப்பாய் மனமே நீ சற்று உள்ளுருகி (ஈசன்)

சரணம்

தேனமுது செந்தமிழை அகத்தியர்க்குரைத்தவனும்
தீனர்தம்பகையெல்லா மவன் திருக்கைவேல் குடித்திடுமே
வானவகோன்செல்வி வள்ளி மணாளன்
வந்தனை செய்திடுவாய் உன்சிந்தையில் நீர்வை என்றே (ஈசன்)

— முருகதாசன்

[நீர்வேலி கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டித் திருவிழா இன்று 2-ம் நாள்]

## சொக்கன் எழுதிய வேந்தனர் பற்றிய நூல் வெளியீடு

(கல்வியங்காடு)

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதிய ''தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனர்'' என்ற நூல் வெளியீட்டு விழா 27ம் திகதி நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெறும்.

யாழ். இலக்கிய வட்டம் நடாத்தும் இவ் விழா இலக்கிய வட்டத் தலைவர் சசிபாரதி சு.சபாரெத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நூல் பற்றிய ஆய்வுரைகளைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. எஸ்.சிவலிங்கராசா, மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோர் நடாத்துவர். வெளியீட்டுரையினை செம்பியன் செல்வனும், அறிமுகவுரையை திரு.வே. இளங்கோவும் ஆற்றுவர் அரியாலையூர்க் கவிஞர் திரு வே ஐயாத்துரை தமிழ்வாழ்த்துப்பாபாடி விழாவினை ஆரம்பித்துவைப்பார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

மீசாலை தெற்கைச் சேர்ந்த இறந்தவராகக் கருதிய பஞ்சாட்சரம் பொன்னுச்சாமியின் நிர்வாக அதிகாரப்பத்திரம் வழங்கல் மனுச் சம்பந்தமாவது: சுப்பிரமணியம் கனகரத்தினம், மீசாலை தெற்கு, மீசாலை.

—மனுதாரர்

இல: 213/ரி.

எதிர்

1. சங்கரப்பிள்ளை மயில்வாகனம், பெரியமாவடி சாவகச்சேரி.
2. சங்கரப்பிள்ளை தம்பிமுத்து,
3. கனகசபை சிவபாதசுந்தரம், (இறந்தது)
4. பொ.கனகசபை சதாசிவம் மூவரும் மீசாலை தெற்கு, மீசாலை.
5. முத்து கனகசபையும்
6. பெண் மீனாட்சிப்பிள்ளையும் இருவரும் அல்லாரை தெற்கு, மீசாலை.

—எதிர்வாதிகள்

7. இராமலிங்கம் நிர்மலனும்.
8. பெண் சிவநேசமும் இருவரும் இராமலிங்கம் மில் சாவகச்சேரி.

இறந்த 3ம் எதிர்வாதியின் இடத்துக்கு 8ம் எதிர்வாதி பதில் எதிர்வாதியாக நியமிக்கப்பட்டது.

—பதில் பிரதிவாதிகள்

9. ஆறுமுகம் சுப்பிரமணியமும்.
10. பெண் ஈஸ்வரியும் இருவரும் மீசாலை தெற்கு, மீசாலை.

—குறுக்கிடும் எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 198 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நிதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டினாலொழிய இத்தால் தேவைபடுத்தப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18ந் திகதி.

நிதிமன்றக் கட்டளைப்படி
**ஆ. குணநாயகம்**
பதிவாளர்

தயாரித்தவர்
**வீ.பொ. கார்த்திகேசு**
மனுதாரின் சட்டத்தரணி

331

## சைவ சித்தாந்தம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டினத்தடிகள் நமது நெஞ்சை நெகிழ்க்கும் வகையில்.

ஊரும் சதமல்ல உற்றுர் சதமல்ல
உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல
பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே யாரும் சதமல்ல நின்றுள் சதம்கச்சி யேகம்பனே

என்று காட்டியுள்ளார்கள். ஆன்மாபொய்ச் சார்பை விடுகின்றநிலையில் மெய்ச்சார்பாகியதிருவருட்சக்தியின் மடியில் வீழ்கின்றது. திருவருட்சக்தி ஆன்மாவில் பதிகின்றது. இதுவே சத்திநிபாதம் என்று சொல்லப்படும். ஆன்மாசுத்த நிலையில் பிரவேசிக்கின்றது. இந்த அவதாரத்தில் இறைவனே சற்குருவாக எதிர்ப்படுகின்றுன் சற்குருவை அதிஷ்டித்து இறைவனே ஆன்மாவுக்கு அருள்செய்கின்றுன் என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். ஞானப்பிரகாசத்தைஅருள்வல்லவன் சிவனே என்று திருமூலர் அருளினர் மாணிக்கவாசகசுவாமிகள்,

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனுகி அருளிய பெருமை

என்றும்,

ஈறிலாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும்

என்றும் சிவனே சற்குருவாகத் தோன்றிய வரலாற்றைக் கூறியுள்ளார்கள். திருவாசகத்தின் இரகசியார்த்தம் இவ்வுண்மையைப் பற்றியதேதாம், ஆன்மா தானுகச் சிவஞானத்தைப் பெறுவதில்லை. சற்குருவின் கடாக்ஷத்தின்ஞல் அதைப் பெறுகின்றது. இதுவே திக்ஷையாகும்.

ஆன்மாக்களின் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம்,திரோபவ,அநுக்கிரகம் என்ற ஐஞ்சு கிருத்தியங்களை இறைவன் என்றும் நடத்துகின்றுன் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இதைச் சைவ சித்தாந்தம் இறைவனது நடன இயக்மாகக் காட்டுகின்றது. சைவ தரிசனம் அண்ட பகிரண்டங்களை எல்லாம் அளாவி அணுத்தோறும் நடக்கும்இறைவனது இயக்கத்தைக் காண்கிறது சிவத்தோடு பிரியாது ஆன்மாக்களையும் உலகத்தையும் இயக்கும் சக்தி சிற்சத்தியாகிய திருவருட் சக்தியென்றும், உலகம் தோன்றும் மாயாசக்தி இதனின்றும் வேருக இறைவனது பரிக்ரக சக்தியுள்ளது என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. மாயை, சுத்த மாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்ற மூவகைப் படும். ஆன்ம தத்துவமாகிய பிரகிருதி மாயையைப்பற்றி சாங்கியம் முதலான ஏனைய தரிசனங்களும் கூறும். ஆனல் இதற்கு அப்பாலுள்ள சிவதத்துவமாகிய சுத்தமாயையை பற்றியும், வித்தியா தத்துவமாகிய அசுத்தமாயையைப் பற்றியும் சைவசித்தாந்தம்ஆராய்கின்றது. சப்தப்பிரபஞ்சமும் அர்த்தப் பிரபஞ்சமும் மாயையினின்று உண்டாவதைச் சைவசித்தாந்தம் விளக்குகின்றது. நாதம்,விந்து,சதாக்கியம்,ஈசுவரம், சுத்தவித்தை என்ற சுத்த மாயாதத்துவங்களையும் கலை, நியதி, காலம், வித்தை,அராகம் என்றஅசுத்த மாயாதத்துவங்களையும்நுணுகி ஆராயும் சிறப்பு சைவசித்தாந்தத்துக்கு உரியது.

சைவசித்தாந்தத்தை தமிழில் விளக்கும் நூல்களுள் முக்கிய மானவை திருமூலர் அருளிய திருமந்திரமும், வாகீசமுனிவர் இயற்றிய ஞானமிர்தம் மெய்கண்டதேவர் முதலிய சந்தானசாரியர்கள் அருளிய மெய்கண்டசாத்திரங்களுமாம் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் என்றமெய்கண்ட சாத்திரங்கள் பிரதான மானவை பண்டைக் காலத்திலின்று தமிழகத்தில் சைவசித்தாந்தக் கொள்கைகள் நிலவி வந்தன என்று கருதுவதற்கு ஆதாரமுண்டு திருவள்ளுவர் அருளியகுறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் சைவசித்தாந்தக்கருத்துக்கள் காணப்படுகின்றன இக் காலத்திலும் சைவசித்தாந்தத்திற்கு உறைவிடமாகஇருப்பது தமிழகமே. காஷ்மீர சைவமும் வங்க நாட்டுச் சைவசித்தாந்தம் கூறும் நாதம் விந்து முதலிய சூஷ்ம தத்துவங்களை ஒப்புக்கொள்ளினும்சிலமுக்கிய கொள்கைளினில் சைவ சித்தாந்தத்தினின்று வேறுபடுகின்றன. சுத்த சைவ சித்தாந்த கொள்கைகள் தமிழ சத்தில்தான் நிலை பெற்றுள்ளன.

(நன்றி:இந்துதர்மம்)

## 41-வது நாள் நினைவஞ்சலி



செல்வன் பரமநாதன் ராஜேந்திரன்
சரவணை கிழக்கு, வேலணை
மலர்வு: 03-7-60
உதிர்ப்பு: 13-9-84

குடிக்கொருவனும் வளர்த்த எம் ஆருயிரே! நிறையும் எம் வாழ்வின் ஊற்றே! காலையில் கொழும்பிலிருந்து வந்துவிடுவாய் என்று வழி மேல் விழி வைத்து எதிர்பார்த்திருந்தோமே! வவுனியா பம்பைமடுவில் இம்மாபெரும் கொடுமை காத்திருந்ததே! எங்ஙனம் ஆறுதலடைவோம்.

இறைவன் சாந்தி அளிப்பானுக

தந்தை, தாய், சகோதரிகள், மாமன்மார்.

(389)

## கந்த ஷஷ்டி விரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று கந்தஷஷ்டி விரதம் ஆரம்பமாகும். காலை ஸ்நபனுபிஷேகமும், விசேஷ பூஜை, திருச்செந்தூர் புராணபடனமும், மாலை சந்தனக்காப்பு சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், வசந்தமண்டப பூஜையும், திருவிழாவும் நடைபெறும்.

★

## மானிப்பாயில்...

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அருள் மிகு வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் கந்தசஷ்டி விழா வியாழன் ஆரம்பமாகின்றது. தினமும் காலை கந்தபுராணப்படிப்பும்மாலைவிசேட அபிஷேகமும் சண்முகார்ச்சனையும் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வருவார். இறுதி நாளன்று சூரசம்மாரமும், அடுத்த நாள் திருக்கல்யாணமும் நடைபெறும்.

## அமெரிக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

27-ம் திகதியும், 28-ம் திகதியும் கொழும்பில் சந்தித்து, முக்கிய பிரச்னைகள் குறித்து ஆராய்வார்கள்.

கொழும்பு 'இன்ரகொன்ரினென்ரல்' ஹோட்டலில் இடம்பெறும் இச்சந்திப்பில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதுவர்களும் கலந்துகொள்வார்கள்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான அமெரிக்க ஆயுத உதவிகள் குறித்தே மேற்படி சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படும் என்று அறியப்படுகிறது.

(3-ம் பக்கமும் பார்க்க)

## இலங்கைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் இந்தியா பலவித நெருக்கடிகளுக்கும் தாக்கத்துக்கும் ஆளாகிறது என்று அமெரிக்க அமைச்சரிடம் விபரமாக எடுத்துக்கூறினர்.

அண்மையில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முழு விபரத்தையும் அவர் அமைச்சருக்கு எடுத்து விளக்கினர்.

## பரிபூரணனின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றதாகவும், கூறப்படுகிறது.

வீட்டிலுள்ள, பெறுமதி வாய்ந்த பொருட்கள் உடைத்து நாசமாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## நிதிச்சேவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கே. செல்வராசா யாழ். அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்துத் தமது மகனை மீட்டுத் தருமாறு கோரியதுடன், மகஜரொன்றையும் கையளித்துள்ளார்.

கொழும்பில் குண்டுகள் வெடித்த சம்பவ தினத்தன்றே இவ்வாளிருவம் கைதுசெய்யப்பட்டதாக அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் போட்டியிடுவதால் தேர்தல் முடிவுகள் நாளைக் காலையே வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டதாகவும் 2500 பேர் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் திரு சந்தானந்த டி சில்வா நேற்றுத்தெரிவித்தார்.

## 53 தமிழ்க்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் விசாரணை ஏதுமின்றி நீண்டகாலமாகச் சிறையில் வைக்கப்படுகிறுர்கள் என்றும், அங்கு இந்த மக்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லையென்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் இத்தகைய பலர் சர்வதேச நீதிமுறைகளைவகையில் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறுர்களென்றும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.''

## கொழும்பை கலக்கிய சூட்கேஸ்

(கொழும்பு)

கொழும்புகோட்டை ரயில் நிலையத்தில் அனுதரவாகக் கிடந்த சூட்கேஸ் ஒன்று இப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

இச்செய்தியைக் கேள்வியுற்ற ஆயுதப்படையினர் ஸ்தலத்திற்கு வந்து பாதுகாப்பான முறையில் திறந்து பார்த்தபோது அதனுள் உடுப்படைவகளே காணப்பட்டன. பின்னரும் இதனையாரும் உரிமை கோரவில்லையாம்.

## 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

**திரு. இளையதம்பி செல்லப்பா**

(செல்லப்பா அன் கோ, யாழ்ப்பாணம்)

மலர்வு: 20-6-1914

உதிர்வு: 26-9-1984



ஆறுத் துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே: உங்கள் பிரிவால் மனங் கலங்கி ஏங்கும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

அன்னுரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் உதவிபுரிந்து துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றேம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

239/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (413)

# "இலங்கையில் திறமையான கவிஞர்கள் வாழ்கின்றனர்"

[சுழிபுரம்]

"தமிழகக் கவிஞர்களை விஞ்சிய வகையில் இன்று இலங்கையிலே மிகத் திறமையான கவிஞர்கள் வாழ்கின்றனர். இவர்கள் ஆக்கங்களுக்கு முதன்மையான மதிப்பு வழங்கப்படுகின்றது நான்எழுதிய பாலர் பாட்டுக்கு தற்போதய கல்வித் திட்டஒழுங்கே முக்கிய காரணமாகவும் ஆதரவு கிடைப்பதற்கு சாதகமாகவும் அமைகின்றது. "எனக்குகோப்பாய் கலாசாலைஅதிபர், கல்விப்பகுதியினர் வழங்கிய பேராதரவும் வெளியீட்டு அச்சக முதல்வர் தந்த ஊக்கமுமே நூல் வெளியாவதற்கும் காரணமாகும்."

இவ்வாறு பாலர் பாட்டு நூல் ஆசிரியர் திரு த. துரைசிங்கம் தமது நூல் அறிமுக விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். வழக்கம்பரை தமிழ் மன்றத்தினுல் நடாத்தப்பட்ட நூல் அறிமுக விழாவுக்கு அதிபர் திரு ச சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்தார்.

தலைவர் திரு ச. சிதம்பரப் பிள்ளை தமது தலைமையுரையில் "ஆசிரியர் திரு த. துரைசிங்கம் ஒரு சாதாரண ஆசிரியராக சேவையில் இருந்து அதிபராகவும் விளங்குவது இவரது திறமைக்கு எடுத்துக் காட்டாகும்என்று கூறினுர். மன்றச் செயலாளர் திரு க. வாமதேவன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

பண்டிதர் அ. ஆறுமுகம் நூலை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினுர். வித்துவான் மு. சபாரத்தினம் பேசுகையில் பாலர் பாட்டு நூல் மிகவும் சிறப்பாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது என்று பாராட்டினுர்.

# இறக்குமதி வேலைகள் பகலில் மட்டுமே!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சிமெந்துத் துறைமுகத்துக்கு வந்துள்ள கப்பலில் இருந்துபகலில் மட்டுமே இறக்குமதி வேலைகள் நடைபெறுகின்றன.

காங்கேசன்துறை லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியவற்றுக்குத் தேவையான ஜிப்சத்தை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று இங்கு வந்துள்ளது.

துறைமுகத்துக்குவரும் கப்பல்களில் இருந்து பொருட்களைக் குறிப்பிட்ட காலஎல்லைக்கு முன்பே தொழிலாளர்கள் இரவு பகலாக வேலை செய்து பாராட்டுப்பெற்றவர்கள் ஆஞல் தற்சமயம் அமுலில் உள்ள கடலில் மாலை 6 மணிக்கும் காலை 6 மணிக்கும் இடையில் போகக்கூடாது என்ற சட்டத்தின்படி பகலில் மட்டுமே இறக்குமதி நடைபெறுகிறதாகத் தெரிவிக்கப்பட்டது

இதனுல் குறிக்கப்பட்டகால எல்லைக்குள் பொருட்கள் இறக்கி முடிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# மோட்டார் சைக்கிள்கள் கொள்ளை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் பணிமனையில் துப்பாக்கிகள் சகிதம் வந்த நான்கு இனம் தெரியாத இளைஞர்களினுல் மோட்டார் சைக்கிள்கள், ஒரு ரேனியோ இயந்திரம் ஒரு தட்டச்சு இயந்திரம் மற்றும் பல இயந்திரப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி அலுவலகத்தினுள் புகுந்த இளைஞர்கள் விவசாய அலுவலர் வேதநாயகம் சில்வா ஜீப் சாரதி ஏ. சித்திரவேல், காவலாளி ஆகியோரைப் பயமுறுத்தி மேற்படிபொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் இதற்கு முன்னர் இரண்டு தடவைகளில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—9(25-10-1984)
வாரம்—வியாழன்
திதி—பிரதமை பிற்பகல் 4-32வரை
நக்ஷத்திரம்—சுவாதி பிற்பகல் 3-58வரை

மேடம்:- தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானசம்பவங்கள்இடம்பெறும் களஸ்திர வழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு புதிய நண்பர்களும் சேருவார்கள்.

இடபம்:- சிறுவிடயங்களுக்குக் கூட அதிக ஆத்திரப் படுவீர்கள் வீஞன சந்தேகங்கள் தோன்றக்கூடும் சிந்தித்த பின் செயலாற்றவும்.

மிதுனம்:- மனம் போல் வாழ்வு இன்று மலரும் கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பிதா வழி சுகக் குறைவிற்கும் இடமுண்டு.

கடகம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம் இதன் மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம் பேட்டி காண்பதற்கு ஏற்றதினம்.

சிங்கம்:- பொருள் வரவுஉபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாக மூட்டும் செய்தியும் கிடைக்கும்.

கன்னி:- வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் வீஞன சிந்தனையால் வேதனைப்படுவீர்கள் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்

துலாம்:- மனப் போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன் மூலம் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்:- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்ககப் பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள் குடும்பத்திலும் அதிக மகிழ்ச்சி நிலவும்.

தனுசு:- தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும் கடந்தகால நிகழ்ச்சிகள் அலை மோதும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

மகரம்:- மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொறுமை படுமளவிற்கு முன்னேற்றமுண்டு அன்னையின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் பெரும்மகிழ்ச்சிக்கு இடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும்.

மீனம்:- எக்காரியத்திலும் கவனஞ் செலுத்துவது விரும்பதக்கது உதவிசெய்யப் போய் குறை கேட்க நேரிடலாம் உடல் நலத்தை பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# யூதாததேயு திருநாள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திரு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்.

ஞாயிற்றுக் கிழமை காலை திருநாட் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

# யானைகள் படையெடுப்பு! விவசாயிகள் பாதிப்பு!!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதிய ஐயன்குளம் கிராமத்தில் காட்டு யானைகள் படையெடுத்து குடியேறியுள்ள விவசாயிகளைத் தாக்கியும், அவர்களது உடமைகளை நாசம்செய்தும் சொல்லொணு அநர்த்தங்களை விளைவித்து வருகின்றது.

இப்பகுதி மக்களைக் காப்பாற்றுமாறு கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சி மாவட்ட அசாரங்க அதிபர் திரு. என் ஜெகநாதனிற்கு புது ஐயன்குளம் விவசாய அபிவிருத்தி சங்கச் சார்பில் அதன் தலைவர் கி. நே. சலேஷயஸ் அனுப்பி வைத்துள்ளார்.

# சுருக்கிட்டு தற்கொலை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைக்குத் தந்தையான குருநாது தியாகராசா மனைவியின் சேலையால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் வீட்டில் இறந்து காணப்பட்டார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்திஞர்.

இறந்தவர் ஒருமனநோயாளி என்றும், சிகிச்சை பெற்றபின் இரண்டு வருடமாக சுகமடைந்திருந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. மனைவி நாகேஸ்வரி சாட்சியமளித்தார். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# டி.எஸ். நினைவாக உணவுப் பொட்டலங்கள்

(வவனியா)

இலங்கையின் முதல் பிரதமரும் பிரபல அரசியல் வாதியுமான காலம் சென்ற டி.எஸ் சேனநாயக்காவின் நூருவது ஆண்டு சிரார்த்த தினத்தையொட்டி வவனியா காட்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளையினர் வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

வைபவரீதியாக கூட்டுத்தாபன கிளை முகாமையாளர் திரு கே யோகநாதன் உணவுப் பொட்டலங்களை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கையளித்தார்.

# யாருடையது?

அளவெட்டி திரு ஐயாத்துரை குகநேசனின் அடையாள அட்டையும் ஒருதொகைப்பணத்தினையும் திரு. அ. சண்முகநாதனும், யாழ் மடம்வீதி திரு மார்க்கண்டு ஸ்ரீகாந்தராசாவின் அடையாள அட்டையையும் பஸ் சீசன் ரிக்கற்றையும் திருமதி தா. பரமேஸ்வரியும், கட்டுவன் திரு. பாக்கியநதன் செல்லத்துரையின் அடையாள அட்டையை திரு ஐ. வன்னியசிங்கம் சுண்டிக்குளி கொழும்புத்துறைவீதி திருமதி நவமணி சண்முகத்தின் அடையாள அட்டையை திரு முகமட் ஹனிபாவும் நயினுதீவு திரு சுப்பிரமணியம் பரமேஸ்வரனின் அடையாள அட்டையை திரு. ஐ சச்சிதானந்தமும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# வகுப்புகளுக்கு சென்றனர்

(புலோலி)

பருத்தித்துறையில் ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்தபெண்கள் கல்லூரி ஆகியன தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை வகுப்புகளுக்குச் சென்றனர். ஆயினும் மாணவர் வரவு மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

பருத்திதுறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் பாடசாலை வகுப்புக்கள் ஆயுதபடையினரால் எரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பருத்தித்துறையிலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் வகுப்புகளை பகிஸ்கரித்திருந்தனர்.

பருத்தித்துறையிலுள்ள பொலிஸ் அதிரடிப்படை முகாமை அகற்றும் வரை மேற்படி இருபாடசாலைமாணவர்களும் வகுப்புக்களுக்குச் செல்வதில்லை என்று தீர்மானித்திருக்கின்றனர்.

(சூ)

# யாழ். மாநகரசபை அச்சுக்கூடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை புதிய அச்சுக்கூடம் ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளதாக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

சபையின் அச்சுவேலைக்ளாகவும், தமாஷாவரிமூலம் கிடைத்துள்ள நஷ்டத்தை சீராக்கவும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளுராட்சி மன்றத்தின் அச்சுவேலைகளை பொறுப்பேற்று செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

ஜனவரி மாதத்திற்கு முன் அச்சுக்கூடம் ஆரம்பிக்கப்படும் எனக்கூறப்படுகிறது. (க)

# துன்னலை கொலைமுயற்சி வழக்கு
# இரண்டு வருட கடூழியமும் ஐநூறு ரூபா அபராதமும்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துன்னலை கொலைமுயற்சி வழக்கில் எதிரிகள் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொருவருக்கும் 2வருட கடூழியசிறைத் தண்டனையும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறினுல் மேலும் 3மாத சாதாரண சிறைத்தண்டனை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் துன்னலையில் 79 பெப்ரவரி 10ம் தேதி மாணிக்கம் குலத்தை கொலைசெய்ய முயற்சித்ததாக, செல்லையா ஆனந்தன், இளையவன் ராஜன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அரசதரப்பில் அரச சட்டத்தரணி எஸ். சிறீஸ்கந்தராசா வழக்கை நடத்திஞர்

ஜீரிசபையினர் 6-1 ஆகப்பிரிந்து எதிரி குற்றவாளி எனத் தெரிவித்ததை தொடர்ந்து நீதிபதி தீர்ப்பு வழங்கிஞர். (க)

# ரூ. 5 லட்சம் செலவில் உபமின் நிலையம்

[மாவிட்டபுரம்]

யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபை மயிலிட்டி உப அலுவலகப்பகுதியில் மின்சார விஸ்தரிப்புக்காக பலாலியில் 5லட்சம் செலவில் உப மின் நிலையம் ஒன்று நிறுவப்படுகிறது.

மயிலிட்டி உப அலுவலகப் பிரிவில் மின்சாரம் போதாமல் இருப்பதாலும் மின்சார விஸ்தரிப்பு மேற் கொள்ள உதவும் வகையிலும் உப மின் நிலையம் ஒன்றை பலாலியில் 535 000 ரூபா செலவில் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

இதற்கிடையில் குரும்பசிட்டியில் உள்ள மின் நிலயத்தின் கிலோவோட்ஸ்சை அதிகரிக்கவும் 90 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# பயிற்சிநிலையத்தில் ரூ12,000 கொள்ளை

[சாவகச்சேரி]

அச்சுவேலியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் சில தினங்களுக்கு முன்னர், இனந் தெரியாத வாலிபர் கோஷ்டி சுமார் 12, 000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது

இக் கோஷ்டியினர் அங்கிருந்த தட்டச்சு யந்திரம், சைக்கிள், சிலைட் புறெஜெக்டர், 69 'பெட் சீட்' போன்ற பொருட்களை எடுத்துச் சென்றனராம்.

சம்பவம் நடைபெற்றதினத்தன்று, கடமையில் இருந்த காவலாளியைப் பயமுறுத்தி மாமரத்தின் கீழ் நிற்குமாறு வேண்டி, நிலையத்தின் இரும்புக் கதவுகளை அலவாங்குகளால் தகர்த்தெறிந்து உள்ளே சென்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நிலயத்தின் பொறுப்பதிகாரி திரு பி ஜே. அருள்நாயகம் காங்கேசன் துறைப் பொலிசில் புகார்செய்ததையடுத்து பொலிசார் நிலையத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றனர் மேற்படி யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கமும், அச்சுவேலி சென்று நிலயத்தைப்பார்வையிட்டார்

# மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தியாக நாளை வெள்ளிக்கிழமை நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் நிகழும் சங்காபிஷேகக் கிரியைகள் இன்று மாலையே ஆரம்பமாகின்றன.

**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சய தாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி, ரஜனிகாந்த், நாகேஷ், சுருளிராஜன் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்.)
30-10-84 வரை
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - விஜயா
**ஒரே வானம் ஒரே பூமி**
(புதிய பிரதி)
விரைவில்
ரஜனி - ராதா
**சிவப்பு சூரியன்**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
கமலஹாசன்— அம்பிகா நடித்த
**சகலகலா வல்லவன்**
(கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்—ராதா
சிவச்சந்திரன்
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி-ஈஸ்மன்கலர்)


**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குங்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Carolyn Judd, Teri Gusman
Angel Colbert
FIVE ANGRY WOMEN
(Strictly For Adults)

24 To 27
**றீகல்** (யாழ் நகர்)
10-30, 2-15, 4-30 only
Fred Williamson
**Blind Rage**
(Action - Karte Film)
திரமிக்க குருடர்களின் திட்டமிடப்பட்ட வங்கிக் கொள்ளை- திடுக்கிட வைக்கும் கராட்டி சண்டைகள்

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CANAN THE BARBARION
**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
மோகன் - பூர்ணிமா
**பயணங்கள் முடிவதில்லை**
(ஈஸ்மன்கலர் - புதியபிரதி)


## பிறந்த தின வாழ்த்து



செல்வன்
## தீபன்

மந்துவிலைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் தீபன் மூன்றுவது பிறந்த தினத்தை நேற்று (24-10-84) குதுகலமாகக் கொண்டாடினர். தீபனை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணன்மார், அத்தைமார், அத்தான்மார், மச்சி, விசி, மற்றும் உறவினர்கள் பல் கலையும் கற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

328


உங்கள் தேவைகளை கலந்தாலோசித்து தீர்த்து வைக்க
நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்
## குயிக்ஸ் என்ரபிறைசஸ்
## TRAVELS & TOURS AUCTIONERS & BROKERS
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வடமாகாண மக்களே!

(I) உங்கள் கார்கள், மோட்டார் சயிக்கிள்கள், வீட்டுத்தளபாடங்கள், வீடுகள், காணிகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் விற்பனைக்கு இருந்தால் எம்மை நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொண்டால் எமது அனுபவமிக்க பிரதிநிதி உங்களுடன் தொடர்பு கொண்டு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் ★

(II) சகலவிதமான PASSPORT, INDIAN VISA அலுவல்களும் செய்து கொடுக்கப்படும் ★ ★

(III) பேர்லின் (BERLIN) செல்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்தே உங்கள் ஆசனங்கள் உடன் பதிவு செய்து கொடுக்கப்படும். அத்துடன் உங்கள் பிரயாணத்திற்காக சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் ★ ★ ★


## 45-வது நாள் நினைவஞ்சலி
### கனகரத்தினம் ஜெயசிங்கம்

பிறப்பு:
18-07-1940
உயிர் பறிப்பு:
11-09-1984



அன்புடனும், பண்புடனும், அனைவருடனும் பழகி குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து 11-9-84ல் வவனியாவில் வைத்து படுகொலை செய்யப்பட்டு எம்மையெல்லாம், என்றென்றும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு தெய்வத்துடன் சங்கமமான எங்கள் ஒளிவிளக்கின் ஆத்மா சாந்தியடைய வீட்டுக் கிரியைகள் நடைபெறும் இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் தகனக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், குறிப்பாக எமது ஆருயிரை அனுராதபுரியிலிருந்து மூளாய் றோட், வட்டுக்கோட்டைக்கு கொண்டுவருவதற்கு உதவிய அரசாங்க உத்தியோகத்தர்கட்கும், நண்பர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், உடன் பிறப்புக்கள்.
மூளாய் றோட், வட்டுக்கோட்டை. 345


## SIVASKANTHA AGENCY
## சிவாஸ்கந்தா ஏஜென்சி

1984-ம் ஆண்டு ஐப்பசி 25-ந் திகதி வியாழக்கிழமை
மக்களின் சேவையை பூர்த்தி செய்ய
குதூகல ஆரம்பம்
"SIVASKANTHA AGENCY"
"சிவாஸ்கந்தா ஏஜென்சி"

கடவுச்சீட்டுகள், விசா, பயணச்சீட்டுக்கள் பெற
(PASSPORTS) (VISA) (TICKETS)
காணிகள் விற்க, வேண்ட,
தொழில் மன்ற பிரச்சனைகள், அரச ஒழுக்காற்று நடைமுறை ஆலோசனைகள் பெற

★ மின்சார உபகரணங்கள்
★ தொலைக்காட்சிப் பெட்டிகள்
★ வானொலிப் பெட்டிகள்
★ கடிகாரங்கள்
★ தையல் மெஷின்கள்
★ வீட்டுத் தளபாடங்கள்

வேண்ட, விற்க, ஏலவிற்பனைக்கு ஒழுங்கு செய்ய
மோட்டார் வண்டிகள் விற்பனை செய்ய,
மோட்டார் வண்டிகளுக்கு பினான்ஸ் (FINANCE) வசதிகள் செய்ய

ஜாதக ஆலோசனைகள் பெற
விவாகப் (கிரகப்) பொருத்தம் பார்க்க
இன்னோரன்ன வேறு சேவைகளையும் பெற

இன்றே நாடுங்கள்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
"Sivaskantha Agency"
"சிவாஸ்கந்தா ஏஜென்சி"

தலைமையகம்: ஏ. சி. கந்தசாமி, 75, பருத்தித்துறைவீதி. ஆணைப்பந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22673

கிளை: என். எஸ். சிவலோகசுந்தரம், "நிலசுந்தர" மானிப்பாய், (மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகாமை)

(384)


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரியைச் சேர்ந்த நுணுவில் கிழக்கு வேலுப்பிள்ளை கதிரித்தம்பி என்பவரின் மரண சாதனமெழுதப்படாத மரணச் சொத்துக்களின் விடயமாக
மரணமெய்தியவர்
கதிரித்தம்பி கைம்பெண் நாகரத்தினம், நுணுவில் கிழக்கு சாவகச்சேரி
மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல: 216

எதிராக

1. கதிரித்தம்பி மகேஸ்வரன்
2. கதிரித்தம்பி பரமேஸ்வரன் இருவரும் நுணுவில் கிழக்கு சாவகச்சேரி
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமெழுதப்படாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி


ஆ. குணநாயகம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11/15 திகதி என்னுல் வரையப்பட்டது
ந. பாலகிருஷ்ணன்
மனுதாரின் சட்டத்தரணி

381

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி
### (25-10-84)

மலர்வு:
3-1-1909



உதிர்வு:
15-11-1982

அமரர் வேலாயுதர் சின்னையா

ஆண்டிரண்டு சென்றாலும் அழுத கண்ணீர் மாறவில்லை.
ஐயா உம் அருஞ்செயல்கள் மனதை விட்டகலவில்லை.
இரண்டாவது திதி தினமாகிய இன்று
அன்புடன் நினைவுகூரும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.
85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 336

# ஆறு நபர்களுக்குக் கிடைத்த தீபாவளிப் 'பரிசு'

## எச்சரிக்கையுடன் விடுதலை

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் பகுதியில் சட்ட விரோத சாராய விற்பனவு, வடிசாராய விற்பனவு, வடிசாராய உற்பத்தி ஆகிய செயல்களில் ஈடுபட்டுவந்த ஆறுபேரை நேற்று முன்தினம் இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டியொன்றுபிடித்து, கம்பங்களுடன் கட்டி சிலமணி நேரம் பொதுமக்களின் பார்வைக்காகவிட்ட பின்னர் எச்சரிக்கைசெய்து விடுதலைசெய்தனர்.

பெருந்திரளான மக்கள் இவர்களைப் பார்வையிட்டனர்.

இந்த ஆறுபேரும் முன்னுமொருதடவை இக்குற்றங்களைப் புரிந்ததற்காக எச்சரித்து விடுவிக்கப்பட்டனர்.

இது இரண்டாவது சம்பவம் என்றும், இதையும் மீறினால் மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் எச்சரிக்கப்பட்டனர்.

சட்டவிரோத சாராய உற்பத்தி, விற்பனையை ஆட்சேபித்து கடந்த வாரம் ராமநாதபுரத்தில் இளைஞர் கோஷ்டியொன்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தது.

# எம். ஜி. ஆர் சுகமடைய பிரார்த்தித்து ஊர்வலம்

(கிளிநொச்சி)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் குணமடையவேண்டும் என்று பிரார்த்தித்து கிளிநொச்சி நகரில் மூன்று இடங்களில் ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயம், உதிரவேங்கை வைரவர் ஆலயம், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம்ஆகிய இடங்களிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலை வந்தடைந்தது.

இந்த ஊர்வலங்களில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். இதனையொட்டிப் பிரார்த்தனை, விசேட வழிபாடுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய பரிபாலனசபை இதற்கான ஒழுங்கை மேற்கொண்டிருந்தது.

# அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அராலியிலுள்ள வீடொன்றைப் பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்நடத்தியபோது நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு மூன்று இளைஞர்கள் பலியானார்கள்.

பலியான இளைஞர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு, பிரேத பரிசோதனை செய்யப்பட்டபின் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சம்பவத்தின்போது இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது, வீட்டிலிருந்து ரோனியோ யந்திரம், சில பிரசுரங்கள், ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதாகவும், வீடு சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

# எம். ஜி. ஆர். உடல் நிலையில் மேலும் முன்னேற்றம்

(சென்னை)

தமிழக முதல்வர் திரு. எம். ஜி ராமச்சந்திரனின் உடல் நிலை முன்னேறிவருவதாகவும் நினைவாற்றலில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகவும் நேற்று நண்பகல் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவரை பார்க்க செல்பவர்களை இன்னார் என்று அவரால் இப்போது அடையாளம் காணக்கூடியதாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் தமிழக அமைச்சரவை நேற்றுக்கூடி முதல்வரின் நிலைகுறித்து ஆராய்ந்தது.

## வங்கிக் கொள்ளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பளுகாமம் இலங்கைவங்கியில் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் திகதி ரூ. 13,767 கொள்ளையடித்ததாக இராசையா கிருஷ்ணபிள்ளை (முதலாம் எதிரி), கனகரத்தினம் யோகரத்தினம் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி டி. ஜே. ஜயலத் முன்னிலையில் மேற்படி வழக்கு விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.


## மரண அறிவித்தல்

### திருமதி மேரி கனகரட்னம்

திருமதி மேரி கனகரட்னம் காலமானார். இவர் காலஞ்சென்ற W. R. கனகரட்னத்தின் அன்பு மனைவியும், ஜோன், அரியமலர், திவ்வியநாயகம் ஆகியோரின் அன்புத்தாயாரும், ரோஸ்மலர், பஸ்தியாம்பிள்ளை (புத்தகசாலை), காந்தமலர் ஆகியோரின் அருமை மாமியாரும், யோசேப்பின் (இரத்தினபுரி) அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை (25- 0-84) பிற்பகல் 4-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அர்ச் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

645/7 கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். 412

## மரண அறிவித்தல்

### திரு. D. C. அரியம் நமசிவாயம்

திரு. D. C. அரியம் நமசிவாயம் (முன்னாள் உடபுசல்லாவ P W. D. ஓவசியர்) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சீனிப்பிள்ளை ஜெயமலரின் அன்புக் கணவரும் திருமதி டொறதி செல்வராசாத்தி, காலம் சென்ற டேவிட் செல்வநாதன் (கிளி), திருமதி சூசன் செல்வநாச்சியார் (R M. P. மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற ஹேமன் ஆனந்தநாயகம், திரு S. இரத்தினசிங்கம் (R. M. P மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கரோலினா செல்வினி, கஸ்டர் செல்வநிதி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 25-10-84 மாலை 4-00 மணிக்கு டச்ரோட் உடுவில் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக யாழ் பண்ணை வீதியிலுள்ள சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 414

## மரண அறிவித்தல்

### திருமதி சோதிமதி பொன்னம்பலம்

கலட்டியைச் சேர்ந்த திருமதி சோதிமதி-பொன்னம்பலம் 24-10-84 காலை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய காரியாலய உதவியாளர் திரு.வைத்தியநாதர்- பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற S. S. பொன்னுத்துரை திருமதி கனகமுத்து- சிவசம்பு ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு. கந்தசாமி, காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி கனகரத்தினத்தின் சிறிய தாயும், இளைப்பாறிய பிரதம கணக்காளர் திரு. கனகரத்தினம், திருமதி- தவமணி- கந்தசாமி, திருமதி- இராசநாயகி- நடராசா, திரு பரமநாதன், திரு. கந்தசாமி, Dr. (திருமதி) குணநாயகி- கந்தசாமி, திருமதி சுஜிதா நவரத்தினராசா ஆகியோரின் அருமை மாமியும், ஞானகுமார், ஞானகௌரி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 25- 10-84 காலை 10-00 மணியளவில் 56. கலட்டி அம்மன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். 401


# தினமும் விமானம் தாழப் பறக்கிறது

(பண்டத்தரிப்பு)

மாதகலில் அண்மையில்மேற்கொள்ளப்பட்ட இராணுவ முற்றுகையைத் தொடர்ந்து ஒவ்வொருநாளும் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்று தாழப் பறந்து ரோந்து சுற்றி வருகிறதாம்.

இதனால் இப்பகுதி மக்கள் எந்நேரமும் பெரும் பீதியுடன் இருக்கின்றார்கள்.

# மட்டுநகரில் விசாரணை நடக்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்ட இரு டாக்டர்களும், இரு தாதிமாரும், மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் மட்டக்களப்பில்வைத்தே தீவிர விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்

இவர்களை மட்டக்களப்புப் பொலிசார் தொடர்ந்து விசாரணைசெய்துவருகின்றனர்.

இவர்கள் விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டதாக வெளிவந்த செய்தி தவறானதாகும்.

# இப்படியும் நடத்தது

[சாவகச்சேரி]

தீபாவளித் தினத்தன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோககி வந்த யாழ் தேவி சாகவச்சேரியில், சிக்னல் விழாததன் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது

அச்சமயத்தில், சாகவச்சேரிச் சந்தை பின்பக்கத்தில் இருக்கின்ற மலசலகூடச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியைப் பார்வையிட்டுக் கொண்டு நின்ற சில வாலிபர்களை, புகையிரதத்தில் பாதுகாப்புகடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் கண்டதும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களைத் தீர்த்தனர் என்றும் துப்பாக்கி வேட்டுச்சத்தங்களைக் சந்தையில் கூடி நின்ற பொதுமக்கள் சிறிது நேரம் அங்குமிங்கும் ஓடினர் எனவும் தெரியவந்துள்ளது


## மரண அறிவித்தல்

### திருமதி K. பத்மநாதன்

பருத்தித்துறை சித்தி விநயகர் வித்தியாலய ஆசிரியை திருமதி பத்மநாதன் காலமாகிவிட்டார். இவர் பத்மநாதனின் அன்பு மனைவியும் முரளிதரன், முகுந்தன், சுகந்தி ஆசிரியை இந்து மகாவித்தியாலயம் கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவு, சாந்தி ஆகியோரின் அன்புத்தாயாருமாவர். ஈமக்கிரியைகள் 25-10-84 வியாழக்கிழமை நான்கு மணியளவில் பருத்தித்துறை இந்து மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

R பத்மநாதன், 3ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. 416

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினமணி வீரசிங்கம்

திருமதி நவரத்தினமணி வீரசிங்கம் 24–10 84ல் காலமானார்- இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களின் அருமை மகளும், இளையதம்பி வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் நாகலோசதேவி கமலநாதன் (சவுதி) இராஜேஸ்வரி, பத்மசோதி, இராஜலிங்கம் (சவுதி) சண்முகலிங்கம் (ஜேர்மனி) சடாச்சரம், சதானந்தராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுருநாதன், அம்பிகாமலர், பிரபுசிகாமணி (R. M P Nayaapu Estate pussellawe) ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரகுருநாதன் (ஜேர்மனி) திருச்சோதி. புண்ணியவதி, ஆனந்தகிருஷ்ணன், குருமூர்த்தி, பாலசுந்தரம், ஜெயந்தி தயாளினி ரேனுகா, விசாகன், வாமலோஜனா, பத்மலோசனி ஆகியோரின் அருமைப்பேத்தியும், சி சுப்பிரமணியம் சி கயிலாயபிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் 25-10-84 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று வில்லூண்டி மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இ. வீரசிங்கம்
48/5 1ம் ஒழுங்கை,
(410) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### பேருவளை பொன்னுத்துரை

பிரபல வர்த்தகர் என். எஸ். பொன்னுத்துரை (பேருவளை) காலமானார் இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், செல்வராசா (பிரான்ஸ்) யோகேந்திரா (வர்த்தகர்-பேருவளை, யோகேந்திராஸ் - யாழ்ப்பாணம்), மகேந்திரன் (வெள்ளவத்தை) விஜேந்திரன் (S. P. L S. அன் கோ செங்கலடி), விமலாதேவி, கமலாதேவி, சரோஜினிவேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜன் (பொறியியலாளர், இராஜசூரியர் இன்ர நாஷனல் மான்பவர்), கமலாவதி, சீத்தாலக்சுமி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 548/2. கே. கே. எஸ். வீதி இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு இன்று 25- 10- 84 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு எடுத்து செல்லப்படும். 415


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.